# Centre for Research on the Economics of Ageing

SMU SINGAPORE MANAGEMENT UNIVERSITY

NEWSLETTER – ISSUE 8 OCTOBER 2018




## உங்கள் பதில்கள் எங்களுக்குத் தேவை. நாங்கள் அவற்றை மிகவும் மதிக்கிறோம்

கடந்த சில மாதங்களாக CREA -இல் மிகுந்த பரபரப்பு நிலவி வருகிறது! 9 மே 2018 அன்று, நாங்கள் முதுமையடைதல் குறித்து தலைமுறைகளுக்கு இடையேயான ஒரு குழு விவாதத்தை நடத்தினோம். அரசாங்கத் துறைகள், அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் அனைத்து வயதுக் குழுவினர்களை உள்ளடக்கிய ஒரு பலவகைப்பட்ட மக்கள் குழு இந்தப் பொதுக் குழுவில் கலந்துகொண்டது. CREA-இன் துணை இயக்குநரான ஜியாமிங் ஜு அவர்கள் வெவ்வேறு தலைமுறையினரைச் சேர்ந்த குழு உறுப்பினர்களை அறிமுகப்படுத்தி, அவர்கள் வயதுத் தடைகளை நம்புகிறார்களா என்பது குறித்த விவாதத்தைத் தொடங்கி வைத்தார். இந்தப் பொதுக் குழு உற்சாகமானதாகவும், அனைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருந்தது.

மக்களின் மாறுபட்ட கண்ணோட்டங்களைப் புரிந்துகொள்வதன் மூலம், நமது வேறுபாடுகளை நாம் ஏற்றுக்கொள்வதன் வாயிலாக தலைமுறையினருக்கு இடையே பிணைப்புகளை ஊக்குவித்து வளர்க்க முடியும் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். பங்கேற்பாளர்கள் அனைவரும் கூட்டிணைந்து புதிய உறவுமுறையைப் பகிர்ந்துகொள்வதுடன் இந்த நிகழ்ச்சி நிறைவடைந்தது. இதைத் தான் எங்களின் மாதாந்தரக் கருத்தாய்வுகள் வாயிலாக அடைவதற்கு நாங்கள் பெரிதும் முயற்சி செய்கிறோம்.


கல்விசார்ந்த விஷயத்தில், முதியோர்களின் தனித்துவமான அனுபவங்களை மதிப்பாய்வு செய்வதற்கு CREA மிகவும் முனைப்புடன் புதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டு வருகிறது. இதற்கு, எங்களின் கருத்தாய்வுகளை நிறைவுசெய்வதற்கான உங்களின் விடாமுயற்சியே காரணமாகும். நன்றி. 4 ஜூன் 2018 அன்று, சுகாதாரப் பராமரிப்புச் செலவினங்கள் மற்றும் நீண்டகாலப் பராமரிப்புக்காக நிதி திரட்டுதல் குறித்து கலந்துரையாடுவதற்காக CREA ஒரு சுகாதார வட்டமேசை கூட்டத்தை நடத்தியது. சக ஆராய்ச்சியாளரான ஜெசிக்கா யா சுன் அவர்கள் 5-ஆண்டு மெடிசேவ் நிரப்புத்தொகைத் திட்டம் குறித்து மதிப்புவாய்ந்த கண்ணோட்டத்தை வழங்கினார். மேலும், 40% -க்கும் குறைவான தகுதிபெறும் தனிநபர்கள் மட்டுமே அவற்றின் பலன்களைப் பற்றி அறிந்திருந்தனர் என்ற தகவலைத் தெரிவித்தார்.

கொள்கை உருவாக்கத்தில் உள்ள இடைவெளிகளை அடையாளம் அறிவதற்கும், சிங்கப்பூரர் மூத்தக் குடிமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்வதற்கான தீர்வுகளை உருவாக்குவதற்கும் இந்த வகையான தகவல்கள் நமக்கு உதவுகின்றன. நாம் SLP-இன் மூன்றாம் ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், சிங்கப்பூரின் முதுமையடைதல் தொடர்பான ஆராய்ச்சிக்கான உங்களின் தற்போதைய மற்றும் எதிர்கால உறுதியேற்புக்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள நாங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறோம்.


## கண்டுபிடிப்பின் சிறப்பம்சங்கள்

சில வாரங்களுக்கு முன்னர், 62, 65 மற்றும் 70வது வயதில் வேலை செய்வது தொடர்பான உங்களின் எதிர்பார்ப்புகள் குறித்து நாங்கள் உங்களிடம் கேட்டிருந்தோம். ஆச்சரியப்படும் அளவிற்கு, மோசமான உடல்நிலையைக் கொண்டிருப்பதாகக் கூறிய மக்கள், நல்ல உடல்நிலையில் உள்ள மக்களைப் போன்ற அதே எதிர்கால வேலை எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்ததை நாங்கள் கண்டறிந்தோம். உடற்குறைகளைக் கொண்டிருக்கும் மக்களும், உடற்குறையில்லாத மக்களைப் போன்ற அதே வேலை எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கின்றனர் என்பது மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது! சிங்கப்பூரர்கள் எல்லா பிரச்சனைகளுக்கும் எதிராக கடுமையாக உழைக்கிறார்கள்.

### சுயமாக மதிப்பீடு செய்யப்பட்ட வெவ்வேறு உடல்நல நிலைகளுக்கான வேலை எதிர்பார்ப்புகளில் சிறிது வேறுபாடு உள்ளன




### ADL கட்டுப்பாடுகள்* உடனான வேலை எதிர்பார்ப்புகளில் எந்த வேறுபாடும் இல்லை




*ADL கட்டுப்பாடுகள் - அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளின் கட்டுப்பாடுகள்

## கூட்டம் நடைபெறும் இடங்கள்

**பீஷான் மைண்ட் ஸ்ட்ரெச்சர் (Bishan Mind Stretcher)**
510 பீஷான் தெரு 13 #03-01 சிங்கப்பூர் 570510

**புக்கிட் மேரா மீட்புக் கணக்காளர்கள்**
164 புக்கிட் மேரா சென்ட்ரல் #03-3655, சிங்கப்பூர் 150164

**ஜூரோங் கிழக்கு ரெகுஸ் பிசினஸ் லாஞ்ஜ்**
21 ஜூரோங் கிழக்கு சென்ட்ரல் 1 ஜூரோங் கிழக்கு ரீஜனல் லைப்ரரி லெவல் 1, சிங்கப்பூர் 609732

**தெம்பினிஸ் NTUC இன்கம் பில்டிங**
300 தெம்பினிஸ் அவென்யு 5 லெவல் 9 தெம்பினிஸ் ஜங்ஷன், சிங்கப்பூர் 529653

**செம்பவாங் ஜஸ்ட் எஜு லேர்னிங் சென்டர**
30 செம்பவாங் ட்ரைவ் #04-04 சன் பிளாஸா, சிங்கப்பூர் 757713

## இரகசியக்காப்பு மற்றும் உங்களின் தனியுரிமை

நீங்கள் எங்களிடம் வழங்குகின்ற தகவல்களை நாங்கள் கடும் இரகசியமானதாகக் கருதி பாதுகாப்போம். மேலும், சிங்கப்பூர் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டத்திட்டங்களின் கீழ், தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) உடன் முழுமையாக இணங்கி நடப்போம்.



## கருத்தாய்வுகளின் தேதிகள்

- நவம்பர் கருத்தாய்வு: **1-25 நவம்பர் 2018**
- டிசம்பர் கருத்தாய்வு: **1-23 டிசம்பர் 2018**
- ஜனவரி கருத்தாய்வு: **1-27 ஜனவரி 2019**

## எங்களைத்தொடர்புகொள்க

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வடிவத்தில் உதவி தேவையென்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, கருத்துக்களோ இருந்தால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY